# 2025 ஆம் ஆண்டு முதல் “ஜனவரி 25 - தமிழ் மொழி தியாகிகள் நாளாக” கடைப்பிடிக்கப்படும்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை ... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

## பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.12 ஆயிரமாக உயர்வு!

அதேபோல், காவிரி நடுவர் மன்றம் மற்றும் மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றிய சமூக நீதிக் காவலர் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் பிறந்த நாளான ஜூன் 25-ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். மாவீரன் “வாளுக்குவேலி அம்பலம்” அவர்களது வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில் அன்னாரது பிறந்த நாளான ஜூன் 10 ஆம் நாள் மாவட்ட அளவில் அரசு விழாவாக 2023 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

வேலூர் அண்ணா கலையரங்கம் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றமான-- முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு விரைவில் எடுத்துச் செல்லலாம். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கிய தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒளிப்பட தொகுப்புகள், photo album, புத்தகங்கள் ஆகியவை செய்தி மக்கள் தொடர்புத் துறையால் காட்சிப்படுத்தப்பட்டு, அதே நேரத்தில் அவற்றிற்கெல்லாம் விரைவு துலங்கல் குறியீடு-QR code பொருத்தி திறப்பு விழா இன்றைக்கு செய்யப்பட்டு, மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவானது அவரது புகழ் நிலைத்திடும் வகையில், பொது மக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக 12 குழுக்கள் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்றைக்கு அது சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதைப்போல சமூக ஊடகப் பிரிவு. செய்தி மக்கள் தொடர்பின் சார்பில் கட்செவி-whatsapp புதியதாக Channel ஒன்று தொடங்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் அனைத்து செய்திகளும் உடனுக்குடன் பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இது பொது மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்துத் துறைகளிலும் மானியக் கோரிக்கைகளின் தகவல்களையும் சமூக வலைதளங்கள் மூலமாக எளிய முறையில் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற பணிகளை இன்றைக்கு செய்தித் துறை மிகச் சிறப்பாக செய்து வருகிறது. அதேபோல, சினிமா துறையைப் பொறுத்தளவிற்கு இன்றைக்கு துறையின் மூலமலாக பல்வேறு பணிகளைச் செய்து வருகிறோம்.

அதே நேரத்தில் தமிழ் அரசு. இன்றைக்கு அரசினுடைய திட்டங்களை இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழரசு அச்சகத்தின் வாயிலாக 36 சிறப்பு வெளியீடுகள் செய்திருக்கிறோம்.

‘தமிழரசு மாத இதழின்’ வெற்றிப் பயணம் 54 ஆண்டுகளைக் கடந்து வெளியிடப்பட்டு வரும் ‘தமிழரசு மாத இதழ்’ இன்றைக்கு முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டது. கடந்த 2021 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது, 30,000 சந்தாதாரர்களை மட்டும் பெற்றிருந்தது. இன்றைக்கு ஏறத்தாழ 1 இலட்சத்து 30 ஆயிரம் சந்தாதாரர்களை பெற்றிருக்கிறது. அதிலே நம்முடைய பணியாளர்கள், செய்தித்துறையினுடைய அலுவலர்கள் சிறப்பாக அந்த சந்தாதாரர்களைச் சேர்த்திருக்கிறார்கள். மேலும் சேர்ப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, தமிழரசு மாத இதழின் 1 இலட்சத்து 1-வது உறுப்பினருக்கு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, அவருக்கு சந்தாவை வழங்கிச் சிறப்பித்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“கலைஞர் எழுதுகோல் விருது”. சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும்

ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையுடன்கூடிய “கலைஞர் எழுதுகோல் விருது”

வழங்கப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டுக்கான “கலைஞர் எழுதுகோல் விருது” திரு. வி.என். சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்குவதற்கு தேர்வு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

“கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது”. தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து “கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது” வழங்கப்படுகிறது. அந்த வகையிலே, 2022 ஆம் ஆண்டுக்கான விருது திரைப்பட வசனகர்த்தா ஆரூர்தாஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான விருது வழங்குவதற்கு தேர்வு செய்யும் பணிகள் இன்றைக்கு நடைபெற்று வருகின்றன.

திரைப்படம், சின்னத்திரை மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்பட கல்லூரி போன்ற மாணவர்களுக்கெல்லாம் பல்வேறு சூழ்நிலைகளால் விருதுகள் வழங்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பாக்கி இருந்தது. ஏறத்தாழ சுமார் 400 பேருக்கு அந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, 2015 ஆம் ஆண்டுக்கான விருதுகளும் சமீபத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. 2016 முதல் இந்த ஆண்டு வரை அங்கிருக்கக்கூடிய சிறந்த திரையுலகினர்களுக்கும், சின்னத்திரை நடிகர்களுக்கும், எம்.ஜி.ஆர். திரைப்பட கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் விரைவிலே விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. அதற்காக ஓய்வுப்பெற்ற நீதிபதி அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அதற்கான தேர்வுகளை நடத்தி வருகிறது. இதுபோன்ற மகத்தான பணிகளை இந்தத் துறை செய்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு பணிகள். இன்றைக்கு செய்தித் துறையின் சார்பிலே முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மகத்தான பணிகளைச் செய்திருக்கிறது. இவற்றையெல்லாம் மக்களிடத்திலே கொண்டு சேர்க்கும் வகையிலே, பத்திரிகையாளர்கள் இன்றைக்கு சிறப்பாக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே செய்தித் துறையின் அமைச்சர் என்ற முறையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பத்திரிகையாளர்கள் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டது. அதன் மூலமாக இன்றைக்கு அவர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, 6-9-2021 அன்று பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, அதிலே இருக்கக்கூடியவர்களெல்லாம் கூடி இன்று பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, வாரியக் கூட்டங்களை நடத்தி, பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பத்திரிகையாளர்களின் நலன்காக்கும் வகையில், இன்றைக்கு பத்திரிகையாளர்கள் நல வாரியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேதான் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் ரூ.10,000/-லிருந்து இன்றைக்கு ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம். அதாவது அவர்கள் மறைந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.5,000/-ம் வழங்கப்பட்டது. இன்றைக்கு ரூ.6,000/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதி. அவர்கள் பத்தாண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருந்தால் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருந்தால் ரூ.3 இலட்சத்து 75 ஆயிரமும், 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருந்தால் ரூ.5 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் நல நிதியத்திலிருந்து வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமாக கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டது. பத்திரிகையாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

சிறந்த இதழியலாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இதுபோன்ற மகத்தான பணிகளை செய்தித் துறை செய்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்!

1) சிவகங்கைப் பகுதியின் இராணியும், ஆங்கிலேயர்களை வெற்றி கண்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனையுமான வீரமங்கை இராணி வேலு நாச்சியார் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

2) தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து நடைபெற்ற விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

3) ஜெர்மனிய நாட்டைச் சார்ந்த சீகன் பால்கு இந்தியாவிற்கு வருகை தந்து தமிழ் மீது ஆர்வம் கொண்டு, தமிழை நன்கு கற்று அறிந்ததோடு, தமிழ்நாட்டில் முதன் முறையாக 1713ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் அச்சு இயந்திரத்தை நிறுவி கிறிஸ்தவ மக்களின் புனித நூலான விவிலியத்தைப் ‘புதிய ஏற்பாடு’ எனும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட்ட பெருமைக்குரியவர். இன்று தமிழில் பல நூல்களை அச்சிடுவதற்கு அடித்தளமிட்ட பெருந்தகையாளர். அவரின் பெருமையைப் போற்றுகின்ற வகையில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும்.

4) பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராகப் பணியாற்றியும், ஹரப்பா மற்றும் மொகெஞ்சோதாரோ போன்ற இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டு சிந்து சமவெளி நாகரிகத்தை வெளிப்படுத்தியவரும், சிந்துவெளி பண்பாட்டின் திராவிட கருதுகோலுக்கு அடிக்கல் நாட்டியவருமான சர். ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்களுக்குச் சென்னையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நிறுவப்படும்.

5) தமிழ்நாடு தந்த அறிவியல் மாமேதைகளில் ஒருவரும், இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவரும், கல்வியாளராகவும், எளியோருக்கு உதவும் நற்குணம் வாய்ந்தவராகவும் விளங்கிய ஜி.டி. நாயுடு அவர்களுக்கு கோயம்புத்தூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

6) ஆசிரியராகப் பணிபுரிந்த மிகப்பெரும் கல்வியாளரும், பல்கலைக்கழக ஆணையத்தின் தலைவராகத் திகழ்ந்தவரும், பல்கலைக்கழகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் சிறப்பான கொள்கைகளை வகுத்தவரும், சுதந்திர இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவராக விளங்கியவருமான பாரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

7) இந்தியாவின் இரும்புப் பெண்மணி எனப் போற்றப்படும் ஒரே பெண் பிரதமரும், தீர்க்கமான வெளியுறவுக் கொள்கையை கொண்டவரும், பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு சென்னையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

8) இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவரும், பொதுமக்களால் “தென்னாட்டு ஜவகர்” என்று அழைக்கப்பட்டவருமான பட்டுக்கோட்டை தியாகி வை. நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நிறுவப்படும்.

9)காவேரி மீட்புக் குழுவில் இணைந்து போராடியவரும், விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டவரும், கரூர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்ட சி. முத்துசாமி அவர்களுக்கு கரூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

10)செய்தி மக்கள் தொடர்புத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 90 நினைவகங்கள், மணிமண்டபங்கள், அரங்கங்கள், நினைவுத்தூண்கள் மற்றும் நினைவு வளைவுகளில் மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் 39 மணிமண்டபங்கள்/அரங்கங்கள் பாதுகாப்பு மற்றும் தூய்மைப் பணிகள் உள்ளிட்ட மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும், எஞ்சியுள்ள 51 மணிமண்டபங்கள்/அரங்கங்கள், 20 மணிமண்டபங்கள்/அரங்கங்கள் மட்டும் பாதுகாப்பு மற்றும் தூய்மைப் பணிகள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின்மூலம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மீதமுள்ள 31 மணிமண்டபங்கள்/அரங்கங்கள் பாதுகாப்பு மற்றும் தூய்மை பணிகள் உள்ளிட்ட மேலாண்மைப் பணிகள் (Facility Management Services) தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ரூ.3.25 கோடியில் மேற்கொள்ளப்படும்.

11) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மணிமண்டபங்கள்/அரங்கங்களில், பராமரிப்புப் பணிகள் (Maintenance), சேதமடைந்துள்ள மணிமண்டபங்கள்/அரங்கங்களில், புனரமைப்புப் பணிகள் (Renovation) ஆகியவற்றை மேற்கொள்ளவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கென கழிப்பறைகள், குடிநீர் வசதி, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், புல்வெளி அமைத்தல் போன்ற (Additional Amenities) கூடுதல் பணிகள் முதற்கட்டமாக ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

12) அரசியல்வாதி, சமூகச் சீர்திருத்தச் செயல்பாட்டாளர், வழக்குரைஞர், ஆதி தமிழர் மக்களுக்காகக் குரல் கொடுத்த திவான்பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குச் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா அச்சரப்பாக்கத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம், ரூ.2.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஜூலை திங்கள் 7ஆம் நாள் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

13) இந்திய விடுதலைப் போராட்டத் தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று போற்றப்பட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச்சிலை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1 ஆம் நாள் கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும்

அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

14) ஆங்கிலேயர்களின் எதேச்சதிகாரச் சட்டத்தை எதிர்த்துப் போராடியதால் 1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சார்ந்த 16 வீரத்தியாகிகளுக்கு ரூ.1.47 கோடி செலவில் நினைவுமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இன்னுயிரை ஈந்த வீரத் தியாகிகளுக்கு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள் மதுரை மாவட்டத்தில் ஆண்டுதோறும் நினைவு நாளாகக் கடைப்பிடிக்கப்படும்.

15) தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் சமூகப் பங்களிப்பினைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாள் நூற்றாண்டினையொட்டி அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது. அவர் பிறந்த நாளான அக்டோபர் 9 ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

16) நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்து ராஜவாய்க்கால் அமைத்த “அல்லாள இளைய நாயக்கர்” அவர்களுக்கு ஜேடர்பாளையத்தில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச்சிலை ரூ.21.80 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான தைத்திங்கள் 1ஆம் நாள் நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

17) தமிழ் மொழி மீது தீராத பற்று கொண்டு, வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியும், கள்ளுக்கடை மறியல், வைக்கம், சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம் மற்றும் நீல் சிலை அகற்றும் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறைத் தண்டனைகள் பெற்ற சுதந்திரப் போராட்டத் தியாகி கு.மு. அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் வேலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

18) தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்காக முதன் முதலில் சட்ட வடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு நாமக்கல் நகரில் மார்பளவு சிலையுடன் கூடிய அரங்கம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் படுகிறது.

சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூ.17.50 இலட்சத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

19) இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்குச் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை ரூ. 21.96 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

20)தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவர், முதல் சட்டப்பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூகச் சீர்திருத்தப் பெண் போராளி மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குப் புதுக்கோட்டையில் திருவுருவச்சிலை ரூ.9.85 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஜூலை திங்கள் 7 ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

21) திரைப்படத்துறையிலும், பாரம்பரிய இசைத் துறையிலும் புகழுடன் திகழ்ந்த ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் கலைத் துறை பன்முக பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையிலும் அவரின் நினைவினைப் போற்றும் வகையிலும் தமிழ்நாடு அரசு திருச்சி மாநகரில் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் ரூ. 79.39 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான மார்ச் திங்கள் 1 ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

22) நீதிக்கட்சியின் வைரத்தூண்” என்று போற்றப்பட்ட சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ரூ.77.62 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப் படும்.

23)இருபதாம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பல்வேறு இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தமிழில் படைத்தவரும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பன்முக ஆற்றல் கொண்டவரும் முதன் முதலில் தமிழில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவருமான தமிழறிஞர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில்

ரூ. 65.77 இலட்சத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

24) கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு, கோவில்பட்டியில் அரங்கமும் அவ்வளாகத்தில் திருவுருவச்சிலையும் மற்றும் நூலகமும் ரூ.1.51 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

25) சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள பத்திரிகையாளர் அறையில், செய்தியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.16.75 இலட்சம்மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

இவ்வாறான அறிவிப்புகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கின்றார்கள்.

### எழுது பொருள் அச்சுத் துறை!

பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து எழுதுபொருள் அச்சுத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரைக்கு நான் வருகிறேன். 192 ஆண்டுகள் பழமையான எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தற்போது 1,565 அலுவலர்களுடன் மற்றும் தொழிலாளர் பணியிடங்களுடன் செயல்பட்டு வருகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவையான அனைத்து நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கும் பணியினை சிறப்பாகச் செய்து வருகிறது. மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதும், முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவுக்கிணங்க நவீன முறையிலே இந்த அச்சுக்கூடம் இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சென்னையில் மட்டும் மைய அச்சகத்திலே பொதுமக்கள் தங்களுடைய பெயர் மாற்றம், பெயர் திருத்தம் செய்கின்ற பணி நடைபெற்று வந்தது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தற்சமயம் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டையில் அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றவதற்கு விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு நவீன இயந்திரங்கள் அங்கே நிறுவப்பட்டு மகத்தான பணிகளைச் செய்து வருகின்றோம். அந்தவகையில், இன்றைக்கு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு இங்கே வெளியிட விரும்புகிறேன்.

### அறிவிப்புகள்

1) சென்னை அரசு மைய அச்சகத்தில் தமிழ்நாடு அரசின் நாட்காட்டி, உயர்நீதி மன்ற நாட்காட்டி, அரசின் கொள்கை விளக்க குறிப்புகள், சட்டமன்றப் பேரவைப் பணிகள், அமைச்சர்களின் நாட்குறிப்பேடுகள், காவலர் பயிற்சி கையேடுகள், தேர்தல் தொடர்பான பணிகள், பல்வேறு துறைகளின் பல வண்ண புத்தகங்கள், பல்கலைக்கழக விடைத்தாள்கள் ஆகியவற்றை செயலாக்கம் செய்வதற்கு ரூ. 9,00,00,000/- மதிப்பில் ஒரு புதிய Sheetfed Offset 4 Colour-CPC இயந்திரம் கொள்முதல் செய்து உட்கட்டமைப்பு மற்றும் மின் பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப் படும்.

2) திருச்சி அரசு கிளை அச்சகத்தின் அவசரப் பணிகளான பல்கலைக்கழக விடைத்தாள்கள், அரசுத் தேர்வு துறையின் விடைத்தாள்கள், அரசு அலுவலகங்களுக்கான பொதுப் படிவங்கள், பதிவேடுகள், காவல், கல்வி மற்றும் மருத்துவத் துறைக்கான படிவங்கள் ஆகிய பணிகளை குறித்த நேரத்தில் செயலாக்கம் செய்திட, புதிய நிரலாக்க காகிதம் வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) ஒன்று ரூ.85,00,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

3) சென்னை அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை அலகுகளில் உள்ள முன் அச்சுப் பிரிவிற்கு தேவைப்படும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ரூ.37,33,358/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

| | |
|---|---|
| 1. கணினிகள் | -22 |
| அரசு மைய அச்சகம் | - 15 |
| அரசு கிளை அச்சகம், மதுரை | - 3 |
| அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | - 2 |
| அரசு கிளை அச்சகம், சேலம் | - 2 |
| 2. Natural Tracing Paper Printer (மதுரை மற்றும் சேலம்) | 02 |
| 3. UPS 5 KVA (அரசு மைய அச்சகம்) | -03 |
| 4. UPS 1 KVA (மதுரை) | -02 |

சென்னை அரசு மைய அச்சகம் உள்ளிட்ட அரசு கிளை அச்சகங்களில் செயல்பட்டு வரும் முன் அச்சுப் பிரிவில், பார்வைப்படிகள் எடுத்து ஒப்புதல் பெறவும், Natural Tracing Paper Output எடுத்து அச்சிடுவதற்கு தேவைபடும் புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ரூ.37,33,358/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

4)சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவின் செயலாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மென் பொருட்களான Adobe CC மென் பொருள் ரூ. 14,51,400/- மதிப்பிலும் மற்றும் Corel DRAW மென் பொருள் ரூ. 6,23,040/- மதிப்பிலும் கொள்முதல் செய்யப்படும்.

5)சென்னை அரசு மைய அச்சகத்தில் மானிய கோரிக்கை தொடர்பான பணிகள், மருத்துவ துறையின் சிற்றேடுகள், அரசு துறைகளின் சிற்றேடுகள் ஆகியவற்றின் முகப்பு அட்டைகளில் Spot UV பணிகளை மேற்கொள்ள, Spot UV Machine ஒன்று ரூ. 15,40,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

6)சென்னை அரசு மைய அச்சகம் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற துறைகளிலிருந்து அச்சுப் பணிக்காக வருகை புரியும் அலுவலர்கள் ஆகியோரின் குடிநீர் தேவைக்காக, சென்னை அரசு மைய அச்சகத்திற்கு (500 LPH) 1 எண்ணிக்கை மற்றும் சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு (250 LPH) 2 எண்ணிக்கைகள் என மொத்தம் 3 எண்ணிக்கைகள் RO Water Plant ரூ.10,44,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.

7) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை சார்ந்த அலுவலகங்களான ஆணையரகம், அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் திருச்சி மற்றும் சேலம் ஆகியவற்றிற்கு 4 அலுமினிய ஏணிகள் மற்றும் அரசு எழுது பொருள் அலுவலகத்திற்கு ஹைட்ராலிக் ஏணி (Hydraulic Ladder) - 2 எண்ணிக்கைகள் ரூ.5,40,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

8) திருச்சி அரசு கிளை அச்சகத்தில் அரசு தேர்வுகள், பொதுத் தேர்தல் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு தேவையான காகித உறைகளை செயலாக்கம் செய்வதற்கு, புதியதாக Heavy Duty Envelope Punching Machine ஒன்று ரூ.4,72,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

9) சென்னை அரசு மைய அச்சகத்தில் உள்ள முன் அச்சுப் பிரிவில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளை செயலாக்கம் செய்வதற்கும், பார்வைப் படிகள் எடுப்பதற்கும், அரசிதழ் பணிகளில் ஒவ்வொரு நிலையிலும் அச்செடுத்து பிழைத்திருத்தம் செய்வதற்கும் A3 Monochrome Laser Printer இரண்டு எண்ணிக்கைகள் ரூ.3,60,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

10) சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்தில் சுமார் 50 கோடி மதிப்புள்ள காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் பராமரிக்கப்படுவதால், அலுவலகத்தின் பாதுகாப்பு கருதி CCTV Camera-கள் ரூ. 3,13,585/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

11)சென்னை அரசு மைய அச்சகத்தில் அரசு நாட்காட்டி, உயர்நீதிமன்ற நாட்காட்டி மற்றும் பெரிய அளவிலான வண்ணப் பார்வைப் படிகள் அச்சிடவும், பல்வேறு வகையான காகிதத்தில் குறைந்த எண்ணிக்கையிலான பிரதிகள் அச்சிடவும் 36” Large Format Plotter type Printer ஒன்று ரூ.2,24,200/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

12) முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர்களின் அலுவலகங்கள், துறைச் செயலாளர்கள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் துறைக்கான மந்தன இரப்பர் முத்திரைகள் செயலாக்கம் செய்வதற்கு Polymer Rubber Stamp Making Machine (Chemical Free) ஒன்று ரூ.2,06,500/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

13) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை-2 வளாகத்தில் நூறாண்டுக்கும் மேலாக உள்ள பாரம்பரியம் மிக்க லாரன்ஸ் கட்டடம் பொதுப்பணித் துறையின் மூலம் புதுப்பிக்கப்படும்.

14) நீலகிரி, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் அரசிதழ்களை அச்சிடவும், மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான படிவங்கள், பதிவேடுகளை அச்சிட்டு வழங்கவும் திருப்பூர் மாவட்டத்தில் புதியதாக ஓர் அரசு கிளை அச்சகம் துவங்கப்படும்.

இறுதியாக, இந்த மானியக் கோரிக்கை தாக்கல் செய்வதற்கு பேருதவி புரிந்த தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் நா.முருகானந்தம், டாக்டர் உமாநாத், டாக்டர் ம.சு. சண்முகம், திருமதி அனு ஜார்ஜ், முதலமைச்சரின் முதன்மை தனிச் செயலாளர். தினேஷ் குமார், உள் துறைச் செயலாளர் திருமதி அமுதா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், , எழுதுபொருள் அச்சுத் துறை ஆணையர் வெ.ஷோபனா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மருத்துவர் இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் இயக்குநர் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள், ஏனைய அலுவலர்களுக்கும் தமிழ் வளர்ச்சித் துறையினுடைய அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், அதேபோல அரசு எழுதுபொருள் அச்சுத் துறையை சார்ந்த பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் நெஞ்சமிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தமிழ்நாட்டு மக்கள் அரசின் மீது மிகப்பெரிய நம்பிக்கையை தன் சீரிய பணிகளால் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை விதைத்திருக்கிறது. அதன் பலன் நாற்பதாக இன்றைக்கு விளைந்திருக்கிறது.

பேரறிஞர் அண்ணா உரைத்தார், “அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை” என்று, அதனை செயலாக்கிய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு முதலமைச்சரின் செம்மாந்த ஆட்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தனித்துவமிக்க தன் பணிகளால் வீறுநடை போட்டு வெற்றிக் களம் கண்டு வருகின்றது.

உலகச் செம்மொழிகளில் உயிர்ப்போடும் ஊட்டத்தோடும் தொடர்ச்சியோடும் எத்தனை தொழில்நுட்பங்கள் வந்தாலும் அத்தனையிலும் பரிமளிக்கும் அமுதமொழியாகத் திகழ்வது நம் தமிழ்மொழியாகும்.

“அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி
ஓதி வளரும் உயிரான உலக மொழி”

என்ற முத்தமிழறிஞரின் பேனா முனை பேசிய பொன் வரிகளைப் பகிர்ந்து எனது பதிலுரை நிறைவு செய்ய வருகிறேன்.

அதேபோல பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை சாதனை வரலாற்றின் தொடர்ச்சியாக இன்றைக்கு பணிகளை செய்து வருகின்ற நேரத்தில் இன்றைக்கு உறுப்பினர் வெட்டுத் தீர்மானங்களை தந்திருக்கிறார்கள். அதையெல்லாம் படித்து பார்த்து இருக்கிறேன். நிச்சயமாக ஓர் அளவிற்கு என்னுடைய பதிலுரையில் இருக்கும்.

அதேபோல உறுப்பினர்கள் பேசிய நம்முடைய சகோதரர் த.வேலு அவர்களுக்கும், அதேபோல மு. அப்துல் வஹாப் அவர்கள், துரை. சந்திரசேகர் அவர்கள், கு. சின்னப்பா அவர்கள், தி.வேல்முருகன் ஆகியோர் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல இதயத்திலும் பதிவு செய்துகொண்டேன். நிச்சயமாக தொடர்ந்து- இன்றைக்கு தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை, எழுதுபொருள் அச்சுத் துறையும் செவ்வனவே செயல்படுத்துவதற்கு நிச்சயமாக அது வெல்லாம் உதவியாக இருக்கும் என்று இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வெட்டுத் தீர்மானத்தை மாமன்ற உறுப்பினர்கள் திரும்ப பெற்றுக்கொண்டு தட்டும் இல்லாமலும், வெட்டும் இல்லாமலும் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு உரையை நிறைவு செய்து அமர்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரையாற்றினார்.